**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.28/2023**
**Joint Trial with**
**அசல் வழக்கு எண்.No.36/2023**

**2025 ஆம்** வருடம் ஜுலை மாதம் 22 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லதா | ஜாதி | : | |
| க.பெ | : | கணேஷ் பாண்டியன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | புதுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 53/2025 |
| தேதி | : | 22.07.2025 | | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களது முதல் கணவரான பொன்னர் என்பவருக்கும், உங்களுக்கு நீதிமன்றம் மூலம் விவகாரத்து நடக்கவில்லை என்றால் சரிதான், ஊர் வழக்கப்படி விவகாரத்து நடந்தது. கணேஷ்பாண்டியனுடன் உங்களுக்கு நடந்ததாக சொல்லும் திருமணத்தை நீங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் இவ்வழக்கில் கோரிய பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**3 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் இறந்துபோனதாக சொல்லும் கணேஷ்பாண்டியனின் தாயார் தான் 3ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். இறந்த கணேஷ்பாண்டியனுக்கு பாஸ்கரன், நாகராஜன், சிவசங்கரன், ராஜேந்திரன் என நான்கு உடன்பிறந்த தம்பிகள் உள்ளனர் என்றால் சரிதான். கணேஷ்பாண்டியன் செம்பட்டி வீட்டில் இருந்தபோது தான் திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போய் இறந்தார் என்றால் சரியல்ல, புதுப்பட்டியில் உள்ள எங்களது வீட்டில் இருக்கும் போது தான் உடல்நிலை சரியில்லாமல் போய் இறந்தார். இறந்த கணேஷ்பாண்டியன் அவர் சார்ந்த சமூகத்தில் சமூக சேவை செய்து வந்தார் என்றால் சரிதான். எங்களது சமூக கட்சியில் மாநில பொது செயலாளராக இருந்து வந்தார்.

21.01.2023 ஆம் தேதி கணேஷ்பாண்டியன் இறந்தார் என்றால் சரிதான். புதுப்பட்டி கிராமம் எந்த கிராம நிர்வாக அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சித்தையன்கோட்டை கிராம நிர்வாக அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது. உங்களுக்கும்

பாலகிருஷ்ணாபுரத்தை சேர்ந்த பொன்னார் என்பவருக்கும் ஏற்கனவே திருமணம் நடந்தது என்றால் சரிதான். அந்த திருமணத்தின் மூலம் உங்களுக்கு இரண்டு ஆண் மகன்கன் என்றால் சரிதான். அந்த இரண்டு ஆண் மகன்களும் உங்களுடன் தான் உள்ளார்கள் என்றால் சரிதான்.

இரண்டாவது குழந்தை பிறந்தபோது உங்களுக்கும், உங்கள் முதல் கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று மட்டுமே உங்களுடைய வழக்கில் கூறியுள்ளீர்கள், என்ன கருத்து வேறுபாடு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களுக்கும், உங்கள் முதல் கணவருக்கும் விவகாரத்து எந்த தேதியில் , யார் முன்னிலையில் வைத்து நடந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஊரில் வைத்து முக்கியஸ்தர்கள் முன்னிலையில் விவகாரத்து நடைபெற்றது. உங்களுக்கும், உங்கள் முதல் கணவருக்கும் விவகாரத்து செய்து கொண்டதற்காக எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

உங்களின் சொந்த ஊர் புதுப்பட்டி என்றால் சரிதான். இறந்த கணேஷ்பாண்டியனின் சொந்த ஊர் அழகர்நாயக்கன்பட்டி என்றால் சரிதான். மேற்சொன்ன உங்கள் இரண்டு ஊரிலும் இல்லாமல் உங்களது திருமணத்தை சின்னாளபட்டி, காந்திகிராமத்தில் உள்ள விநாயகர் கோவிலில் உங்களுக்கும், கணேஷ்பாண்டியனுக்கு திருமணம் நடந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. காந்திகிராமத்தில் எந்த தெருவில் உள்ள விநாயகர் கோவில் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, காந்திகிராமத்தில் இருந்து அண்ணாநகர் செல்லும் வழியில் உள்ள விநாயகர் கோவிலில் திருமணம் நடைபெற்றது.

நீங்களும், கணேஷ்பாண்டியனும் திருமணம் செய்துகொண்டதற்காக புகைப்படம் உள்ளிட்ட திருமணம் செய்து கொண்டதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், சாட்சிகள் மட்டும் உள்ளார்கள். உங்களுடைய வழக்குரையிலும், பிரமாண வாக்கமூலத்திலும் மேற்சொன்ன சாட்சிகள் குறித்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். கணேஷ்பாண்டியன் இறந்த பிறகு நீங்கள் சித்தையன்கோட்டை பேரூராட்சிக்கு சென்று அவரின் இறப்பை பதிவு செய்வதற்கு முயற்ச்சி செய்யவில்லை என்றால் சரியல்ல, சென்றேன். எனது மாமியாரும், கொழுந்தனாரும் ஆட்சேபணை செய்ததால் இறந்த கணேஷ்பாண்டியனின் இறப்பை பதிவு செய்ய முடியவில்லை.

எனது மாமியார் அதற்கு முன்பாகவே பச்சமலையான்கோட்டையில் எனது கணவரின் இறப்பை பதிவு செய்துவிட்டார். 3 ஆம் பிரதிவாதி இறப்பை தவறாக பதிவு செய்தது தொடர்பாக பிறப்பு , இறப்பு பதிவாளர் மேல் முறையிட்டாளரிடம் நீங்கள் ஆட்சேபணை செய்தீர்களா என்றால் இல்லை. இறந்த கணேஷ்பாண்டியன் செம்பட்டி வீட்டில் இருக்கும் போது இறந்ததால் தான் பச்சமலையான்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்து இறப்பு சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

நீங்கள் சித்தையன்கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கணேஷ்பாண்டியன் இறக்கவில்லை என்பதால் தான் கணேசபாண்டியனின் இறப்பை பதிவு செய்யவில்லை என்றால்

சரியல்ல. இறந்த கணேசபாண்டியனின் இறப்பை பச்சமலையான்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் முறையாக விசாரணை செய்து 04.02.2023 அன்று இறந்த கணேசபாண்டியனின் இறப்பை பதிவு செய்து, 3 ஆம் பிரதிவாதி அவர்களிடம் கணேசபாண்டியனின் இறப்பு சான்றிதழை வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. 04.02.2023 அன்று பச்சமலையான்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய இறப்பு சான்றிதழில் மனைவி என்ற காலத்தில் உங்களுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு நான் மனைவி என்ற விபரம் தெரிந்த பிறகு சரிசெய்து கணேசபாண்டியனின் மனைவி என்று சான்றிதழ் வழங்கியுள்ளார்கள்.

04.02.2023 க்கு பிறகு மறுதினம் நீங்களும், உங்கள் உறவினர்களும் உங்கள் பெயரை கணேசபாண்டியனின் மனைவி என்று சேர்க்க சொல்லி பிரச்சனை செய்ததால் பிரச்சனையை தவிர்ப்பதற்காக மட்டுமே உங்கள் பெயரை கணேசபாண்டியனின் மனைவி என்று சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கணேசபாண்டியனின் வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக உங்களுக்கும், கணேசபாண்டியனுக்கும் நடந்ததாக சொல்லும் திருமணத்தின் ஆவணங்களையோ, உங்களுக்கும் முதல் கணவருக்கும் விவகாரத்து ஆன ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குடும்ப அடையாள அட்டை உள்ளிட்ட பிற ஆவணங்களை மட்டும் தான் சமர்பித்தேன்.

1ஆம் பிரதிவாதி விசாரணையின் போது உங்களுக்கும், கணேசபாண்டியனுக்கும் நடந்ததாக சொல்லும் திருமணத்தின் ஆவணங்களையோ, உங்களுக்கும் முதல் கணவருக்கும் விவகாரத்து ஆன ஆவணங்களையோ தாக்கல் செய்யாததால் தான் உங்களுக்கு வாரிசு சான்றிதழ் வாங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. உங்கள் சமுதாயத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் குடும்பன், காலாடி என்ற பிரிவு உள்ளது என்றால் சரிதான். உங்கள் ஊரின் குடும்பன், காலாடி பெயர் தெரியுமா என்றால் வெள்ளைப்பாண்டி என்பவர் ஊர் காலாடியாவார், மேற்படி நபர் புதுப்பட்டி என்றால் சரிதான். மேற்சொன்ன ஊர் காலாடி வெள்ளைப்பாண்டி என்பவர் உங்களின் பங்காளி என்றால் சரியல்ல.

இறந்துபோன கணேசபாண்டியன் உங்கள் தகப்பனாரின் குலதெய்வத்தை குலதெய்வமாக கொண்டவர் என்றால் சரியல்ல. இறந்த கணேசபாண்டியனும், உங்கள் அப்பாவும் ஒரே பங்காளிகள் என்றால் சரியல்ல. கணேசபாண்டியன் சமுதாய சேவையில் இருந்ததால் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்தார் என்றால் சரியல்ல. நீங்கள் கணேசபாண்டியனுடன் முறையாக திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழ்ந்து வந்தீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கும், கணேசபாண்டியனுக்கும் திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்றும், வழக்கிற்காக திருமணம் செய்துகொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

உங்களுக்கும், உங்கள் முதல் கணவருக்கும் விவகாரத்து நடந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. உங்களுடைய முதல் கணவர் உங்களை விவகாரத்து செய்ததாக சொல்லியதற்கு பிறகு மறு திருமணம் செய்துகொள்ளவில்லை என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. உங்கள் முதல் கணவர் மீண்டும் அவர் இறக்கும் வரை இரண்டாவது திருமணம் செய்துகொள்ளவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கு தெரிந்திருந்தும் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. இறந்து போன கணேசபாண்டியன் உங்களை திருமணம் செய்துகொள்ளாததால் அவரின் சட்டப்படியான வாரிசு நீங்கள் இல்லை என்றால் சரியல்ல. எனவே, அசல் வழக்கு எண்.28/2023 ல் நீங்கள் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இறந்துபோன கணேசபாண்டியனுக்கு அசல் வழக்கு எண்.28/2023 ல் கண்ட 3 ஆம் பிரதிவாதி மட்டுமே வாரிசு ஆவார் என்றால் சரியல்ல.

3 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.36/2023 ல் உள்ள பிராது படி கணேசபாண்டியனின் தாயார் ஆன பாப்பா அவர்கள் மட்டுமே சட்டப்படியான வாரிசு என பரிகாரம் பெற தகுதியானவர் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் அனைத்தும் பொய்யான தவவல்களை சொல்லி நீங்கள் வாங்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. எனவே, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor